செய்தி வெளியீடு எண் : 2231 நாள் : 07.11.2023

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் 20 தொழில் முனைவோர்களுக்கு ரூ. 3.15 கோடி மானியத்துடன் ரூ. 9.81 கோடி வங்கி கடனுதவி வழங்கினார்

********

மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் (07.11.2023) இன்று சிட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில் தொழில் வணிக ஆணையரகத்தின் செயல்படுத்தப்படும் அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட 13 மாவட்ட பொது மேலாளர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் **20** தொழில் முனைவோர்களுக்கு ரூ.3.15 கோடி மானியத்துடன் ரூ.9.81 கோடி வங்கி கடனுதவி வழங்கி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது "மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் முறைப்படுத்தும் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ஆகிய 5 வகையான திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளில், ரூ.827 கோடி மானியத்துடன் ரூ.2 ஆயிரத்து 503 கோடி கடன் உதவி வழங்கப்பட்டு, இதுவரை 28 ஆயிரத்து 325 இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். .

மேலும், நடப்பு நிதியாண்டில் 26 ஆயிரம் தொழில்முனைவோர்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது இதில், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர் இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர் ஆகிய 13 மாவட்டங்களில் கடந்த 8 மாதங்களில் 5 ஆயிரத்து 198 தொழில் முனைவோர்களுக்கு ரூ.160 கோடியே 83 லட்சம் மானியம் வழங்கப்பட்டு ரூ. 482 கோடியே 49 லட்சம் வங்கிக் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த 5 சுய வேலைவாய்ப்பு திட்டங்களின் சிறுபான்மையினர் மாவட்ட தொழில் மைய அலுவலர்களுக்கு மகளிர், மாற்றுத்திறனாளிகள், பட்டியலினத்தவர், பழங்குடியினர் என தனித் தனியே இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் சில மாவட்டங்கள் இலக்கினை எய்தாத நிலை உள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தில் பொது மேலாளர்கள் தனி கவனம் செலுத்தி, பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தின் அடித்தட்டு மக்களை தொழில்முனைவோர்களாக மாற்ற முழு முயற்சியுடன் பணிபுரிய வேண்டும். மேலும் துறையால் செயல்படுத்தப்படும் முதலீட்டு மானியம், ஊதிய பட்டியல் மானியம், பின்முனை வட்டி மானியம் போன்ற 10 வகை மானியங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அவற்றினை குறித்த காலத்தில் எந்த காலதாமதமும் இன்றி தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இந்த திட்டங்கள் குறித்து புதிய தொழில்முனைவோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டும். உணவு பதப்படுத்தும் தொழிலை அடிப்படையாக கொண்ட பிரதான் மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான திட்டத்தை வேளாண் தொழில் சார்ந்த மாவட்டங்களில் முழு முனைப்புடன் செயல்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் அளிக்கும் வகையில் அவர்களையும் தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கும், விவசாயிகளுக்கும், MSME தொழில் நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக செயல்பட்டு இத்திட்டத்தை முழுமையான அளவில் அனைத்து பகுதிகளுக்கும் சென்றடையும் வகையில் செயல்படுத்திட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைக்கான அரசு செயலர் திருமதி. அர்ச்சனா பட்நாயக் இ.ஆ.ப தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.T.நிர்மல் ராஜ், இ.ஆ.ப., தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையர் திருமதி.கிரேஸ் பச்சாவ் இ.ஆ.ப., தொழில் வணிகத்துறையின் கூடுதல் இயக்குநர்கள் மருதப்பன், ஏகாம்பரம் மற்றும் மாவட்ட பொது மேலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in